1970 பிப்ரவரி 28] [திரு. ஓ. பி. இராமன்]

அளிப்பதும் இச் சிறப்புத் திட்டத்தில் அடங்குமாயின் செலவு மேற்கொண்டும் அதிகரிக்கும். நிதி வாயில்கள் குறைவாக உள்ளதாலும் போதிய அவகாசமில்லாமையாலும், சிறப்புத் திட்டத்தின் கீழ் தெருவிளக்குப் போடும் பணியுடன்கூட விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணியையும் மேற்கொள்ள இயலாது. எல்லா ஊர்களுக்கு, சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கும் இணைப்புகள் போடப்பட்டு விட்டால் அப் பகுதியில் அமைக்கப்படும் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பது எளிதாகிவிடும். இவ்வாறு இம் மாநிலத்தில் எல்லா விசையேற்றங்களுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதற்கு இச் சிறப்புத் திட்டம் ஒரு முன்னோடியாக விளங்கு விளங்குவதாக எடுத்துக் கொள்ளமுடியும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, மழையில் லாத காரணத்தால் வறட்சியான பகுதிகளில் தொடர்ந்து நடத்தி வருகிற விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்குச் சில இடங்களில் கம்பங்கள் நடப்பட்ட நிலையில் இருக்கின்றன. காரணம் கேட்டால் கம்பிகள் இன்னும் வரவில்லையென்று சொல்கி றார்கள். எனவே கம்பிகளை உரிய காலத்தில் கொடுத்து விரைவிலே மின் இணைப்புக் கிடைக்கச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

(5) அறிவிப்புகள்.

(அ) பேரவையில் சில உறுப்பினர்கள் பார்வார்ட் பிளாக் கட்சி உறுப்பினர்களாகத் தனித்து இயங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. கே. மூக்கையாத் தேவர், செளடி. எஸ். சுந்தர பாரதி, ஏ. ஆர். பெருமாள், வி. தவமணித் தேவர், எஸ். பரமசிவம், ரா. இரத்தினத் தேவர், எஸ். அழகுத் தேவர் ஆகியோர் தமிழகச் சட்டப் பேரவையில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது தலைமையில் ஃபார்வார்ட் பிளாக் உறுப்பினர்களாகத் தனித்து இயங்கப் போவதாக எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. இக்கடி தத்தில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது கையெழுத்து இல்லை. ஆதலால், அவருக்கு இதுகுறித்துக் கடிதம் எழுதியுள்ளேன். அவ ரிடமிருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேரவையில் சில உறுப்பினர்கள் திரு. பூவராகன் தலைமையில் தனிக் கட்சியாக இயங்கத் தனி இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரா. கனகசபை, கோ. பூவராகன், பி. வெங்கிடாசலத் தேவர், அ. சேனாபதிக் கவுண்டர், டி. தீர்த்தகிரி கவுண்டர், என். தீர்த்தகிரி ஆகியோர் திரு. கோ. பூவராகன் அவர்களது தலைமை யில் தனிக் கட்சியாகச் சட்டப் பேரவையில் இயங்குவார்

என்றும், அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கக் கோரியும் எனக்குக் கடிதம் வந்துள்ளது. இதன்மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: அந்தக் கட்சியின் பெயர் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஒரு தனிக்கட்சி.

திரு. ப. மகாதேவன்: பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை . . . .

திரு. எஸ். இராமச்சந்திரன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் தலைமையில் தனிக் கட்சி இயங்கும் என்று குறிப்பிட்டீர்கள். அந்தக் கட்சியின் பெயர் என்ன என்று பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிப்பார்களா? லோக்சபாவில் ஆளும் தரப்பில் காங்கிரஸ் ரூலிங் என்றும், எதிர்த்தரப்பில் காங்கிரஸ் அப்போசிஷன் என்றும் கூறுகிறார்கள். இங்கே தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கட்சியின் பெயர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உங்களுக்கு ஏன் அந்தக் கவலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கட்சிக்குப் பெயரிடுகின்ற பொறுப்பு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இல்லை. அவர்கள் பெயரை அறிவித்ததும் நான் அவைக்கு அறிவிக்கிறேன்.

(6) 1970-71-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்

* **திரு. ப. மகாதேவன்:** பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தைத் துவக்கி வைக்கும் வாய்ப்பை எனக்குக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கும், எங்கள் கட்சித் தலைவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த பட்ஜட்டைப் பற்றிப் பல கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் செய்திப் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். இதைப்பற்றி பொதுமக்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும்கூட, மக்களைப் பற்றிச் சிந்திக்காத மன்னர்கள் காலத்தில் வரி விதிப்பது போன்று வரிகள் நிறைந்த கொடுமையான பட்ஜட் என்று கூறுகிறார்கள். ஒரு நண்பர் என்னிடம், 'இந்த பட்ஜட்டில் ஒரு வரி கூட இல்லை', என்று சொன்னார். இதிலே ஆறு கோடிக்கும் அதிகமாக வரி போட்டிருக்கிறார்களே, நீங்கள் இல்லை என்று சொல்லுகிறீர்களே, என்று நான் கேட்டேன். அவர் கூறினார், 'இந்த நிதிநிலை அறிக்கையில் வரி என்று சொல்லாத ஒரு வரி கூட இல்லை' என்று. அவர் அவ்வாறு வேடிக்கையாகச் சொன்னது உண்மைதான். வரிக்கு மேல் வரி, வரிக்கு வரி போடப்பட்டிருக்கிறது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே